[2002 மே 2

சென்னை நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, டெல்லி, மும்பை மற்றும் மேலை நாடுகளைப் போன்று சென்னை நகரின் அருகிலுள்ள பகுதிகளுக்கு Satellite City அமைத்துத் தரப்படுமா என்பதோடு, வளர்ந்து வருகின்ற கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் போன்ற நகரங்களிலும் Satellite City அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மூலம் அம்பத்தூர், ஆவடி, தாம்பரம், எண்ணூர், மணலி, மீஞ்சூர் ஆகிய புறநகர் பகுதிகளை விரிவாக்கி ஒவ்வொன்றிலும் 2.3 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்குவது என்ற திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள மக்கள்தொகை பெருக்கத்தைக் குறைப்பதற்காக குடும்பக் கட்டுப்பாடுதான் அவசியமான தேவையாக இருக்கும். ஆனால் துணை நகரம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற கருத்து வருகிறபோது அந்தக் குடும்ப நலத் துறை பற்றிய அக்கறை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே குடும்ப நலத்தை வெகுவாக பேணிப் பாதுகாத்து, இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலம் என்ற பெயரையும் புகழையும் பெற்றிருக்கிற மாநிலம் நம் தமிழ்நாடு. அப்படி அதனாலும் பாதிப்பு வந்திருக்கின்ற காரணத்தால் இப்படி விரிவுபடுத்தி துணை நகரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதற்கு வீட்டு வசதித் துறை அமைச்சரிடம் பதில் இல்லை.

வினா எண் 273, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

2002 மே 2]

273—

வீட்டு வசதி

***12900—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி எல்லையிலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி எல்லையிலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கம்.

சேலம் மாவட்டத்தில், குறிப்பாக சேலம் மாநகராட்சிப் பகுதியில் கோட்டை, லைன்மேடு, திப்புசுல்தான் மார்க்கெட் பகுதி, கார்பெட் பகுதிகளில் எல்லாம் சிறுபான்மையின முஸ்லீம் ஏழை மக்கள் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் சிறு சிறு வாடகை வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக இருந்து வருகின்ற நிலையில், பீடித் தொழிலைச் செய்து வரும் பீடித் தொழிலாளர்களுக்கு, ஏழ்மையில் வாழ்கின்ற பீடித் தொழிலாளர்களின் நலனைக் காக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 2

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, பீடித் தொழிலாளர்களுடைய நலன் கருதி, வேலூரில் 679 வீடுகளும், திருச்சியில் 286 வீடுகளும், ஈரோடில் 89 வீடுகளும், நாமக்கல்லில் 55 வீடுகளும், கோயம்புத்தூரில் 48 வீடுகளும் திருவள்ளூரில் 128 வீடுகளும், மொத்தம் 1285 வீடுகள் கட்டுவதற்கு எங்கள் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, சேலம் நகர்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு யோசிக்கப்படும் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 274, திரு. கி. பாரிமோகன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

274—

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

***633—திரு. கி. பாரிமோகன்:**
திரு. ஜி.கே. மணி:
திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கும் திட்டமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.